இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 204 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 21 – புதன்கிழமை 05 மார்ச் 2025 – கோவை ★★ 16 + 4 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 204: Thiruvalluvar Year - 2056 - Maasi 21 - Wednesday 05 March 2025 - Kovai ★★ 16+4 Pages ₹ 5.00

## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – 7

# மொழித் திணிப்பல்ல! தொழில்நுட்பமே தேவை!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் தொடர் மடலின் ஏழாவது பகுதி.**

14 வயது முதல் இருவண்ணக் கொடியை உயர்த்திப் பிடித்து, 72 வயதிலும் கழகத்தின் தலைவராக அல்லாமல், கழகத்தின் தொண்டனாகக் கருதி உழைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஊக்கமளிப்பது உடன்பிறப்புகளான உங்களைப் போன்றவர்களின் வாழ்த்துகள்தான்.

என் பிறந்த நாளையொட்டி சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் – மாண்புமிகு அமைச்சர் என் அன்புக்குரிய மா.சுப்பிரமணியன் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற என்னுடைய பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டத்தில் தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்று வாழ்த்தினார்கள். அவர்களின் வாழ்த்துகள் தனிப்பட்ட எனக்கானவையல்ல. நம் இயக்கத்திற்கான வாழ்த்துகள். அவற்றை வாழ்த்து என்று சொல்வதைவிட, நம்பிக்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

> **சகோதரி தமிழிசையின் மும்மொழி வாழ்த்தில் ‘இந்தி’ இடம்பெறவில்லை. அதுதான் தமிழ்நாட்டில் நிலவுகிற உணர்வின் வெளிப்பாடு.**

**இந்திய ஒன்றியத்தால் இன்றைக்கு நாம் எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துகளையும் நெருக்கடிகளையும் தோழமைக் கட்சித் தலைவர்கள் விரிவாக விளக்கி, மும்மொழித் திட்டம் என்ற பெயரால் இந்தியைத் திணிக்க முயற்சிப்பதைத் தடுத்திடவும், தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைத்திடவும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும், பா.ஜ.க. ஆட்சியின் ஜனநாயக விரோதப் போக்குகளையும் சுட்டிக்காட்டி, இவற்றை எதிர்கொள்ளும் வலிமை கொண்ட இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான என் மீது நம்பிக்கை வைத்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.** அந்த நம்பிக்கை என்பது, என் மீதானதல்ல, உடன்பிறப்புகளாம் உங்களையும் உங்களில் ஒருவனான என்னையும் ஒருங்கிணைத்து வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை.

அதனால்தான் என்னுடைய பிறந்தநாளைக் கொண்டாட்டமாக மட்டுமில்லாமல், இனம் – மொழி காப்பதற்கும், மாநில உரிமைகளை மீட்பதற்குமான போராட்டமாக முன்னெடுக்க வேண்டும் என்று காணொலி வாயிலாகக் கோரிக்கை வைத்தேன்.

**“ஒரே இலக்கு - தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்”** என்பதை உடன்பிறப்புகளான நீங்கள் ஏற்று, மார்ச் 1ஆம் நாள் என்னுடைய பிறந்தநாளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கழக அமைப்புகளிலும் அந்த உறுதிமொழியை ஏற்று, பிறந்த நாள் நிகழ்வுகளை நடத்திய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகளுடன் இணைந்து நானும் அந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டுதான், தொண்டர்களின் கடலாக மாறிய அண்ணா அறிவாலயத்தில் ஏறத்தாழ 6 மணி நேரத்திற்கும் மேலாக நின்று ஒவ்வொரு உடன்பிறப்பின் அன்பான வாழ்த்துகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

கழகத் தலைவர் என்ற பொறுப்பினை உடன்பிறப்புகளான நீங்கள் என் தோளில் சுமத்தியதால், தமிழ்நாட்டு மக்கள் முழுநம்பிக்கை வைத்து ஜனநாயக முறைப்படி முதலமைச்சர் என்ற பொறுப்பை வழங்கினார்கள். அதனால் என் பிறந்தநாளில் குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், ஆளுநர், பல்வேறு அரசியல்கட்சிகளின் தலைவர்கள் தங்கள் அன்பான வாழ்த்துகளைப் பதிவிட்டிருந்தனர். அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

பா.ஜ.க. நிர்வாகியான அன்பு சகோதரி டாக்டர் தமிழிசை சௌந்திரராஜன் அவர்கள் எனக்கு ‘மும்மொழி’யில் வாழ்த்துத் தெரிவித்துப் பதிவிட்டிருந்தார். மும்மொழித் திட்டத்தை ஏன் எதிர்க்கிறோம் என்பதை விளக்கி என்னுடைய பிறந்தநாள் செய்தியை நான் வெளியிட்டிருந்த நிலையில், சகோதரி அவர்கள் மும்மொழியில் வாழ்த்தி தன் அன்பையும், தன் இயக்கத்திற்குரிய ‘பண்பையும்’ காட்டியிருக்கிறார். சகோதரி தமிழிசையின் வாழ்த்துச் செய்திக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழிசையின் மும்மொழி வாழ்த்தில் ‘இந்தி’ இடம்பெறவில்லை. அதுதான் தமிழ்நாட்டில் நிலவுகிற உணர்வின் வெளிப்பாடு.

## உங்களில் ஒருவன்

தமிழ் – ஆங்கிலம் இரண்டு மொழிகளில் அமைந்த வாழ்த்துக்குப் பிறகு, தெலுங்கு மொழியில் வாழ்த்தியிருக்கிறார். உங்களில் ஒருவனான எனக்கு தெலுங்கு தெரியாது. நான் படித்ததும் இல்லை. **தெலுங்கானா மாநில ஆளுநராக இருந்த சகோதரி தமிழிசை அவர்கள் தெலுங்கு மொழியை அறிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால், அவர் தெலுங்கு மொழியைப் பள்ளிப் பருவத்திலேயே படித்து அதனைத் தெரிந்துகொள்ளவில்லை. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலத்தில் பணியாற்றியதால், பழக்கத்தின் மூலமாக அறிந்து கொண்டிருக்கிறார். இதிலிருந்தே, மூன்றாவதாக ஒரு மொழியை வலிந்து படிக்க வேண்டியதில்லை என்பதையும், தேவைப்படுகிறவர்கள் அதனைப் புரிந்து கொண்டு பயன்படுத்த முடியும் என்கிற திராவிட இயக்கத்தின் கொள்கை வழியிலான தமிழ்நாட்டின் உணர்வையும் எனக்கானப் பிறந்தநாள் வாழ்த்துப் பதிவின் மூலம் உறுதிப்படுத்தியுள்ள சகோதரி தமிழிசைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.** என்ன இருந்தாலும், அவர் நம் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ‘தகைசால் தமிழர் விருது’ பெற்ற இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் திருமகள் அல்லவா!

சகோதரி தமிழிசை அவர்கள் தெலுங்கு எழுத்துகளில் வாழ்த்துச் செய்தியை எழுதக்கூட அவசியமில்லை என்கிற அளவிற்கு அவருடைய பதிவிலேயே இன்றைய நவீனத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை அறிய முடிகிறது. செயற்கை நுண்ணறிவுத் துறையின் முன்னேற்றமும், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு எழுத்தாகவும் குரலாகவும் மாற்றக்கூடிய வாய்ப்பும் எளிய முறையில் எல்லாரும் பயன்படுத்தும் வகையிலான மென்பொருள்கள் கைபேசிகளிலேயே பயன்பாட்டுக்கு வந்துவிட்டன.

> **Google Translate, Chat GPT, Artificial Intelligence போன்ற தொழில்நுட்பங்கள் மொழிச் சிக்கல்களை மனிதர்கள் எளிதாகக் கடப்பதற்கு உதவுகின்றன.**

Google Translate, Chat GPT, Artificial Intelligence போன்ற தொழில்நுட்பங்கள் மொழிச் சிக்கல்களை மனிதர்கள் எளிதாகக் கடப்பதற்கு உதவுகின்றன. அச்சிடப்பட்ட காகிதத்தைப் படம் எடுத்து, அதை இன்றுள்ள தொழில்நுட்பத்தில் எழுத்துருக்களாக மாற்றி, நாம் எளிதில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒரு மொழியில் உள்ள ஒலிப்பதிவை மற்றொரு மொழியில் மாற்றம் செய்து கொள்ளும் வசதிகளும் உருவாகிவிட்டன. ஒவ்வொரு மொழிக்கும் தேவையான தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்வதுதான் மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகுந்த பயனளிக்கும். அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மொழியையும் மாணவர்களிடம் திணிக்க முயற்சிப்பது அவர்களுக்கு சுமையாகவே அமையும். கல்வியாளர்கள், மொழி அறிஞர்கள், குழந்தைகள் நல செயல்பாட்டாளர்கள், மருத்துவத்துறையினர் உள்ளிட்ட அறிவியல் சார்ந்த பார்வை கொண்ட பலரும் இதைத்தான் தெரிவிக்கின்றனர். அறிவியலைப் புறக்கணிக்கும் கட்சியான பா.ஜ.க.வும் அதன் நிர்வாகிகளும்

> **அறிவியலைப் புறக்கணிக்கும் கட்சியான பா.ஜ.க.வும் அதன் நிர்வாகிகளும் மொழித் திணிப்பைக் கட்டாயமாக்குகிறார்கள்.**




தொடர்ச்சி 2-ஆம் பக்கம்